வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

ந.க.எண். 4939 /ஆ5/2025, நாள். .10.2025

பொருள்: பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – மத்திய அமைச்சகம் அறிவித்துள்ள அறிவியல் சார் போட்டிகள் அனைத்து பள்ளிகளுக்கும் தெரிவித்தல் – சார்ந்து.

பார்வை: சென்னை–6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப் பணித்திட்டம்) செயல்முறைகள் ந.க.எண். 048596/எம்2/இ2/2025, நாள். .09.2025.

-------

பார்வையில் காணும் செயல்முறையின்படி, பள்ளிகளில் புதுமையான நுட்பங்களுடன் கற்பித்தல், கற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை மாணவர்களிடம் ஊக்குவிக்கும் விதத்தில் பகுப்பாய்வு சிந்தனையுடன் சிந்திப்பது, சிக்கல்களைத் தீர்ப்பது, படைப்பாற்றலுடன் பல்துறை அணுகுமுறையைக் கற்றுக்கொள்வது, புதுமைகளை படைக்கும் ஆக்கத் திறன்கள், ஆராய்ந்து ஏற்கும் திறன்கள் மற்றும் புதிய துறைகளில் அறிவை பெருக்குவதற்கு சீராகக் கற்றுக் கொள்ளும் திறன்களை வளர்த்தல் போன்றவற்றை வலியுறுத்தும் விதமாகவும், நவீன பாடப்பிரிவுகளை ஒருங்கிணைத்து, மாணவர்களின் 21–ஆம் நூற்றாண்டு திறன்களை உருவாக்கும் செயல்பாடுகளை உற்சாகப்படுத்தும் விதமாகவும் மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ள அறிவியல் சார்ந்த போட்டிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி பங்குபெறச்செய்யுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

போட்டிக்கான வழிமுறை மற்றும் கால அட்டவணை உரிய விவரத்துடன் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

போட்டி குறித்த வலைதள விவரங்கள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு.

- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பதிவு மற்றும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய வலைதள முகவரி: aim.gov.in (Buildathon 2025– Register and login)
- பதிவு மற்றும் பதிவேற்றம் செய்யும் முறை குறித்த காணொளி மேற்குறித்த வலைதளத்தில் உள்ளது.
- சந்தேகங்களுக்கு அணுகவேண்டிய மின்னஞ்சல் முகவரி: vbb.mic@aicte-india.org

இணைப்பு – பார்வையில் காணும் கடித நகல் மற்றும் போட்டிக்காக வழிமுறைகள்

06.10.2025

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்

பெறுநர்
அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்.
(இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.